
உளி- 1 | ஓசை-76 | ஆகஸ்ட், செப்டம்பர் -2023 | திங்களிதழ்

படைப்பு

# கல்வெட்டு

கவிதை மின்னிதழ்



அரசு பதிவெண்: 521/2018

நிறுவனர் & ஆசிரியர் :
ஜின்னா அஸ்மி

நிர்வாகக் குழு :
சகா (சலீம் கான்)
ஜெ. ராஜா ஜெயகரன்

ஆசிரியர் குழு :
படைப்பு தேர்வுக்குழுமம்

இதழ் உருவாக்க உதவி :
ஷெண்பா
பிரபுசங்கர் க
தி.கலையரசி

வடிவமைப்பு :
முகம்மது புலவர் மீரான்

அட்டைப்படம் :
திண்டுக்கல் தமிழ்ப்பித்தன்

இணையதள முகவரி :
www.padaippu.com

அலுவலக முகவரி :
படைப்பு குழுமம்
#8, மதுரை வீரன் நகர்
கூத்தப்பாக்கம்,
கடலூர் - 607002

படைப்பு பிரைவேட் லிமிட்டட்,
#12/6, மூன்றாம் தளம்,
வெல்வோர்த் ப்ராபர்ட்டீஸ்,
7 வது தெரு , டாக்டர் சுப்பாராயன் நகர்,
கோடம்பாக்கம், சென்னை - 600 024.
admin@padaippu.com
✆91 7338897788 / 7338847788

படைப்புகள் யாவும் முகநூல் படைப்புக்குழுவிலிருந்து தேர்வுசெய்யப்பட்டவை
இந்த மின்னிதழில் தங்களது படைப்புகள் வர வேண்டுமெனில் முகநூல் படைப்பு குழுவில் இணைந்து படைப்புகளை பதிய வேண்டுகிறோம். மின்னஞ்சலில் அனுப்பப்படும் கவிதைகளை பிரசுரிக்க இயலாது.

| | | | |
|---|---|---|---|
| வினோத் பரமானந்தன் | - 4 | பிருந்தா சாரதி | – 20, 21 |
| கி.சரஸ்வதி | - 5 | லாஸ்யா | - 22 |
| கதிரவன் வீ | - 5 | ஜேபி நீக்கிழார் | - 22 |
| நா.கி.பிரசாத் | - 6 | தங்கேஸ் | - 23 |
| மு.முபாரக் | - 6 | ச.ஆனந்தகுமார் | - 24 |
| பூங்கோதை கனகராஜன் | - 6 | ச. இராஜ்குமார் | - 24 |
| வேலணையூர் ரஜிந்தன் | - 7 | அன்பு மணிவேல் | - 25 |
| முகமது பாட்சா | - 8 | சந்துரு_ஆர்சி | - 26 |
| மீ. யூசுப் ஜாகிர் | - 8 | எஸ்தர் ராணி | - 27 |
| நடராஜன் பெருமாள் | - 9 | மெஹறாஜ்பேகம் | - 27 |
| கவி செல்வா | - 9 | தமீம்.அசாருதீன் | - 28 |
| மா. காளிதாஸ் | - 10 | கருவை ந.ஸ்டாலின் | - 28 |
| செ.புனிதஜோதி | - 11 | பிரபு பாரதி | - 28 |
| பிரபுசங்கர் க | - 12 | கா வெங்கடேஸ்வரன் | - 29 |
| செந்தூர்குமார் | - 12 | மணவை லைவின் | - 30 |
| வத்திராயிருப்பு தெ.சு.கவுதமன் | - 13 | ஷபானா ஆதம்லெப்பை | - 31 |
| கனியமுதுஅமுதமொழி | - 14 | சஸ்னா லாபிர் | - 32 |
| சசிகலா திருமால் | - 15 | கதிரவன் மதி | - 32 |
| கோ. பாரதிமோகன் | - 16 | கலைச்செல்வி | - 33 |
| ஜனனி | - 17 | வானம்பாடி | - 34 |
| மகேஷ் சிபி | - 18 | மகிழினி காயத்ரி | - 35 |
| ம.சூர்யா திருமால் | - 18 | ரகுநாத் வ | - 36 |
| கோ.லீலா | - 18 | குபோதினி | - 37 |
| சகா | - 19 | காரையன் கதன் | - 38 |
| மழைக்குருவி | - 19 | ஸ்ரீவாரிமஞ்சு | - 39 |

# கவிதையின் கடைசிச் சொற்கள்



சக உயிரின்
சங்கடத்தில்
உதிர்க்க
சில துளி கண்ணீர்...

அன்பினால்
பின்னப்பட்ட
இழையும்,விலையும்
குறைந்த ஆடை...

வீண் எனத்
தெரிந்தும் விடாமல்
தூக்கித் திரியும்
விரக்திப் புன்னகை...

தடுமாற்றத்துடன்,
தரவும்,
பெறவும்
மறந்த போன
தாராள மன்னிப்பு....

இதயத்தின் துடிப்பில்
இருக்கும்
இசையில்லா
ஓர் பாடல்...

காசு,பணம்
ஆசை துறந்த
அழகிய கனவு...

சொல்லுக்கும்
சொல்லுக்குமான
மெல்லிய
இடைவெளியை
நிரப்பிட
கொஞ்சம் மௌனம்...

கவிதை என
காலம் மறுத்த
கடைசி சொற்கள்...

சுவாசிப்பதற்கான
நம்பிக்கையில்
வெளிவரும்
மூச்சின் கனல்

இவைகளை தவிர
வேறொன்றுமில்லை
என்னிடமும்
எதிரில் வந்த
உன்னிடமும்.......

**வினோத் பரமானந்தன்**

# அம்மா எனும் நான்



நினைவு முன்னும் பின்னும்
அலைப்புற்று இடறி
மருத்துவமனையில்
இருக்கும் அப்பாவை
கைத்தாங்கலாக கழிப்பறைக்குக்
அழைத்துச் செல்கிறேன்
மிச்சமிருக்கும் நினைவைக்
கூட்டிக் கூச்சம் கொண்டு
கண்ணீர் சொரியும்
அவரைத் தேற்றியவாறு
அப்பா எனத் தேம்புகிறேன்
அவர் என்னை எப்பவும் போல
அம்மா என்றழைக்கிறார்
விசும்பியபடி

**கி.சரஸ்வதி**

வெளாவி பதமா வச்சிருக்கேன் குளிச்சு வாப்பா
எனும் ஆத்தா

சுடு காபி பதமாத்தான் இருக்கு குடிச்சுக்கப்பா
எனும் ஆத்தா

சோத்த ஊதி ஊதி எனக்கு சுடுமுன்னு தட்டுல
வைக்கும் ஆத்தா

செத்த பொறுத்து போப்பா வெய்ய தாழட்டும்னு
சொல்லும் ஆத்தா

கொள்ளி வச்ச தீய எப்படி தாங்கியிருப்பா...?

**கதிரவன் வீ**



மூச்சின்றி
மூங்கிலாகிப்போனது
இறந்தவனின் புல்லாங்குழல்!

**நா.கி.பிரசாத்**

எதுவுமே
தெரியாமலிருந்த
என்னை,
கவிஞனாக்கிவிட்டு
எல்லாம் தெரிந்த நீ
கவிதையாகி விட்டாய்....

**மு.முபாரக்**

ஒரு புள்ளி வைத்து கோடு என்கிறாய்
கோடிழுத்து ஓவியம் என்கிறாய்
வளைத்து விட்டு இலைகள் பூக்கள் என்கிறாய்

புள்ளி கோடு வளைவுகளை எழுத்துகளாக்கி
அதையேதான் நானும் செய்கிறேன் கவிதையில்

**பூங்கோதை கனகராஜன்**

# தாய் நிலத்தைப் பிரிதல் கொடுமையல்ல



ஆசுவாசத் துளிர்கள்
கருகிப்போகும் வாழ்வியல் வனாந்தரத்தில்
ஒரு மழலையென அவ்வப்போது வீறிட்டுக் கதறுகிறது
இந்த ஆழ்மனது

உணர்வுகளைப் பலியிட்டு
ஆசைகளை ஆழப்புதைத்து
வேடம் தரித்து
நகர்கின்றன நாழிகைகள்

ஒரு பொழுதேனும்
சில தருணத் தாகம்
அள்ளித்தின்ற மண்ணில்
உருண்டு பிரளத் தாளாத ஏக்கம்

காய்ந்து போன விழிகளுக்கு
ஊர்த் தெருவின் எழிலசைவைக்
கண்டுகளிக்க வீறிடும் விருப்பு

அம்மா கைபிசைந்த குளைசோறும்
அப்பா சுட்டுத்தரும் கருவாடும்
முற்றத்து வேப்பமர நிழலில்
குடும்பமாய் உண்டு சுவைக்கப் பேரவா

தென்னை மர இளநீரும்
பனை மரத்து நொங்கும்
நண்பர்களோடு கூடிக்
குலை குலையாய்ப் பறித்துப் பருகிய
தேவலோக பானங்கள் எல்லாம்
நாவிற் பெரும் தாக ஊற்று

கனவுகளும் நினைவுகளும்
பரிதவிப்பால் நிறைந்திருக்க
உதடுகள் மட்டும் புன்னகை முலாம்
புதுப்பித்துக் கொண்டிருக்கிறது

உண்மையில்,
தாய் நிலத்தைப் பிரிதல் என்பது
அத்தனை கொடுமையானது அல்ல;
அதை நீங்கள் அனுபவிக்காதவரை!

**வேலணையூர் ரஜிந்தன்**



மலைகள் அழுக்காகிவிட்டது
ஆதிக்குடியின்
விலாவெலும்புகளின் மிச்சங்கள் புதைந்து விட்டன..
பூக்கள் அழுகி
உதிரத் தொடங்கி விட்டன....
பாம்பு, நரி, பறவைகள் இடம்பெயர. வீழும் மரங்களில்
அரண்மனை சன்னல் நிலைக் கதவுகள்...
நீரழுத்த இழுவை எந்திரங்கள்
காலத்தின் முலையையறுத்து பாலருந்துகின்றன...
தாதுக்களைத் திருடுகிறவன்
நாகரீகம் பேச...
நகரத்தின் குடிசைகள் எரிந்து வீழும் போது
காட்டினோசை...
பூமியின் முலைக்காம்பு வெடிப்பில் தீப்பிழம்பு கசிய....
உருகும் பனிமலை
கடலோடு ஒப்பந்தம் பேசிக் கொண்டிருக்கிறது...
இது கூட ஒரு
மீட்சிமைக்கான  போராட்டம்தான்.

**முகமது பாட்சா**

கைப்பிடி கருணையை
தூவிச்செல்கிறாள்.,
தன் கைக்கொள்ளும்
வரை தானியங்களை
எடுத்து வந்து
குருவிகளுக்கு
தீனிப்போடும்
குட்டி தேவதை..!!!

**மீ. யூசுப் ஜாகிர்**



உங்க அப்பனுக்கு
ஒரு எழவும் தெரியாது
என்பாள் என் அம்மா

உங்க அம்மாவுக்கு
ஒரு காடாத்தும் தெரியாது
என்பார் என் அப்பா

என் அப்பாவின்
மறைவிற்குப் பின்

என்னிடம் பழைய வார்த்தைகள் பேச
ஒருவர் கூட நகரத்தில் இல்லை.

**கவி செல்வா**

நடனம் தொடங்கி விட்டது
பன்னீரால் நனைகிறது வெளி
திங்களின் ஆட்டமோ தீரவில்லை
பனிப் பூக்கள் பல்லக்காக மாற
கை வீசவில்லை காற்று
படகொன்று அருகில் வருகிறது
நானே துடுப்பாகிறேன்
நானே வெறுப்பாகிறேன்
களி கொண்ட மனது
கட்டுக்கடங்கா வேகத்தில்
காதலிக்கிறது காதலிக்கிறது
நீங்களே சொல்லுங்கள்
இப்போது எப்படி
தட்டிவிட முடியும்
என் மேல் பொழிகிற
அந்த சிறுநீர் மழையை

**நடராஜன் பெருமாள்**



அந்தத் தகவல்
உங்களை அடைந்திருக்க வாய்ப்பே இல்லை.

தொழில்நுட்பக் கோளாறால்
மௌனக்குறியோடு
மழலையாய் உறங்கிப் போயிருக்கும் அலைபேசி

தோற்கடித்த மோசமான கனவிலிருந்து வெளியேற
முடியாமல்
அலையாய் ஒரு தத்தளிப்பு

உதயத்திற்கு ஏங்கும் மேற்கிலிருந்து தப்பித்தோம்
பிழைத்தோமென்ற
பறவையின் சிறகடிப்பு

கூக்குரல் காட்சி அகலாமல்
ஏதும் செய்யும் வழியற்றுத் திரும்பும்
தூக்கச் சடவு

ஆடிப்பட்டத்தில் தேடித்தேடி
விதைத்ததெல்லாம் முளைத்து நிற்கிறது
களைச்செடியாய்

இமயமலைப் பனியுருகி
அடங்காப் பெருவெள்ளம்
அடித்துக் கொண்டு போகட்டும்
அத்தனை அசிங்கத்தையும்

தூய்மை குடித்துத் துளிர்க்கும் உயிர்
துள்ளும் சாயல்
அன்பாக மட்டும் இருக்க
ஆசிர்வதியுங்கள் கடவுளர்களே.

**மா. காளிதாஸ்**

# மனதின் குரல்



ஒருவரின் சாயலில்
ஏழுபேர் இருப்பதாய்
பாட்டி கதை சொல்லியிருக்கிறாள்.
அம்மா உடன் பிறந்த
மூன்று அண்ணன்களில்
அம்மாவுக்கு பிடித்தமான அண்ணன்
சண்முகராஜ் மாமா.
அம்மாவுக்குப்பிடிப்பதால்
எங்களுக்கும் பிடிக்கும்.
மாமா இறந்து
பல வருடங்கள் கடந்து
ஒரு புத்தக கடையில்
மீண்டும் மாமாவைப்
பார்த்தேன்
அதிர்ச்சியாக இருந்தது
கண்களைக் கசக்கி
மீண்டும் பார்த்தேன்
அதே முட்டைகண்
ஜிப்பா,வெள்ளைவேஸ்டி
அவரைச்சுற்றி ஒரேகூட்டம்
வேறொரு பெயரில்
அழைத்தார்கள்
யாரென கேட்டேன்
மிகச்சிறந்த கவிஞர் என்றனர்
எனக்கு என்னவோ
ஒருமுறை வாய்முழுவதும்
சண்முகராஜ் மாமா என
அழைத்திட ஆசை.

செ.புனிதஜோதி

# கண்ணீர் துளிகள்



இதுவரை அப்பா அழுது
ஒருமுறை கூட பார்த்ததில்லை
என்கிறாள் அக்கா
பாட்டி இறந்த போது கூட
அப்பா அழவே இல்லை
ஊர்ஜிதப்படுத்துகிறாள் தங்கை
அப்பா எப்போதாவது
அழுதிருக்கிறாரா??
பல கட்ட யோசனைகளுக்கு பிறகு
அதே கருத்தை
முன்மொழிகிறேன் நானும்
எதேச்சையாக எங்கள் உரையாடலை
கேட்டுக் கொண்டிருந்த அம்மா
"அப்பாவுக்கே தெரியாமத்தான்
அப்பா அழுவாங்க" என்கிறாள்
இது புதிரா?? பதிலா??

**பிரபுசங்கர் க**


துச்சாதனன் உரித்த
திரௌபதியின் துகில்
வானகத்து முகிலென நீண்டதாம்.
ஒருவேளை
அவதார புருஷர்களுக்கு
மட்டும்தான் நீளமோ
கடவுளின் கருணைக்கரம்கூட..

**செந்தூர்குமார்**



எனக்கான ஒரு சொல்
உன்னோடுதான் இருக்கிறது
சொல்லாமல் தருவாயென
சொல்லாமலிருக்கிறேன்...
ஏதேதோ சொல்கிறாய்
அந்த சொல்லை மறைத்துவிட்டு...
நானும் விடுவதாயில்லை
நீயும் தருவதாயில்லை
இப்போதெல்லாம்
எந்த சொல்லுமே வருவதில்லை
உன்னிடமிருந்து...
நான் அனுப்பும் சொல்லனைத்தையும்
மொழி புரியா கல்வெட்டென
கடக்கிறாய் உணர்வின்றி...
எச்சொல்லும் வராத உன்னிடமிருந்து
அச்சொல் வருமென்ற
நம்பிக்கையில்லை இப்போது...
இருக்கட்டும் உன்னிடமே
நீ சொல்லாத அச்சொல் தான்
உன் அடையாளம்!
நீ சொல்லாத அச்சொல் தான்
உன் அழகு!
நீ சொல்லாத அச்சொல் தான்
உன்னில் தீரா ஈர்ப்பு!
நீ சொல்லாத அச்சொல் தான்
நீ!
அச்சொல் இனி உனக்கானதும்...

**வத்திராயிருப்பு தெ.சு.கவுதமன்**



முகமற்ற
முகங்களோடு
முகமற்று போகிறேன்

மனதை கீறியபடி
உள்ளது
பிடிபடாமல் நழுவும்
பிறழ்வு

மூளையின் இரசாயன
மாற்றத்தில்
காக்காப்பொன் கருப்பில்
நெளிந்தாடுகின்றன
பல வர்ணஜால
தோரணங்கள் .

அலைவுறும்
எண்ணங்களின்
ஜதியாட்டத்தில்
மிதிபட்டு தெறிக்கும்
உயிரின் வலியுடன்
பிறழ்வின் மடி
சாய்கிறேன்
உன் முகம் காண்கிறேன்

**கனியமுதுஅமுதமொழி**

# ஆடையற்ற காதல்..



ஆடையற்று இருந்த போதிலும்
காமம் கரைந்து
காதல் மிருகம் தான்
தலைத்தூக்கியது அவர்களிடம்..

ஒற்றை ஆப்பிளைப்
பகிர்ந்து உண்ணும் பக்குவம்
இருந்தது அவர்களிடம்...

ஆடையை லட்சியம்
செய்யாததாலோ என்னவோ
அங்கத்தை ஓர் பொருட்டாகவே
கருத்தில் கொள்ளவில்லை அவர்கள்..

ஆடை சற்றே விலகினாலும்
கவனம் சிதறி
காமம் தலைக்கேறுபவர்களிடம் இருந்து
சற்றே தள்ளி இருந்தவர்கள் அவர்கள்..

உணர்ச்சிகளை உள்ளடக்கி
உணர்வுகளுக்கு மதிப்பளித்து
உன்னதமான காதலை
செப்பியவர்கள் அவர்கள்..

கடித்துண்ட ஆப்பிளின்
ஒற்றைப் பகுதியில்
ஓராயிரம் உணர்வுகளை
நமக்காய் விட்டு சென்றவர்கள் அவர்கள்..

இங்கு.. ஆடையற்ற காதலும்
அழகாய்தான் இருக்கிறது..
அற்புதமான காதல் உணர்வுகள்
ஆதாம் ஏவாளோடு
ஆதியும் அந்தமுமாய்
முடிந்துவிட்டதோ என்னவோ தெரியவில்லை...
இப்போது எங்கு தேடியும் கிடைக்கவேயில்லை...

**சசிகலா திருமால்**

## கஸல்



காதலால் முத்தமிடப்பட்ட என் இதயம்
அவளின் குடியிருப்பாக இருந்த நாளில்
துயரை உறங்கவைத்திருந்தது காலம்

நன்றிக்கான காணிக்கைக்கு
கண்ணீர்த் துளிகளைவிட புனிதம் எது

அவளது சாயலை தானமேற்று
தேனூறிய மலர்
வசந்தத்தை ஏந்தியிருந்த பருவம்
தீ பற்றிய ஒரு கனவானது

கை கூடும் நாளில்
கொல்லியை உயர்த்தியது எவருடைய கரம்

உண்டா எங்கேனும்
முள்ளும் தம்மோடுதான் பிறந்ததென்பதை
ஒப்பாத ரோஜா

சொல்லுங்கள் எங்கேதான் உள்ளது
நிலமோ விதையோ
ஈரமில்லாமல் போனதன் சாட்சியாவதற்கு
உடைபடப் போகிற இதயத்தின் சபை

களையாத காலத்தின் மௌனம்
அசைக்கிறது
மேலும் கீழுமென என் தலையை

பாவத்தை விதைத்ததன் சாப அறுவடை
என் இருத்தல் இனி

இதோ
உயிரின் மீதான ஆசையில்தான்
காதலிடம் பதுங்கியிருக்கிறது
சாவின் நிழல்

**கோ. பாரதிமோகன்**



நீ எப்படி வேண்டுமானாலும் இருந்துவிட்டு போ....

யார்சொல்லியும் கேட்காத அலைகள்
மீன் சொல்லி கேட்குமா..?
உட்கூற்றை ஏற்குமா.? என்ன.!

பிடிவாதங்களும் கொஞ்சம்
படித்துத்தான் போகிறது ஏனோ...
பித்தென ஆகிடாது உன்னில்
பிரயத்தனம் மேற்கொள்கிறேன்

கரை மோதும் போதெல்லாம்
கரையை கரைத்து போவதும் மாயைதான்
சுமந்து வருவதை மறுக்கும்
சூட்சமதாரிகளுக்கு

வாய்திறந்து மேலெழுந்த
சிப்பிகள் அறியாதா என்ன
மழையின் வருகை

முதல்துளி முத்தாவதெல்லாம்
வாய்மூடி ஆழ்கடல் அமர்ந்த பின்புதான்....

நடுக்கடலில் அமைதிகொள்ளும் அதே அலைதான்
பக்குவமின்றி ஆர்ப்பரிக்கும் கரைதனில்

ஆழ்மன அன்பில்
நானும் அலைதான்..... ஆனால்
ஆழ்கடல் அலை.!

இனி நீ...
முத்தாவதும் பித்தாவதும் உன்வசமே...

நீ எப்படி வேண்டுமானாலும் இருந்துவிட்டு போ....

ஜனனி



காற்றில் நீயெறிந்த
பறக்கும் முத்தமும்
நான் எறிந்த பறக்கும் முத்தமும்
ஒரே நேர்க்கோட்டில் பயணிக்கின்றன
முத்தங்களின் பயணத்தை திசைமாற்றும் தொழில்
நுட்பம்
உன்னிடத்திலுமில்லை
என்னிடத்திலுமில்லை
விடு மோதிக்கொள்ளட்டும்

**மகேஷ் சிபி**

பட்டாம்பூச்சியின் சிறகு
பிரிந்து இணையும் இடைவேளைக்கும்
மின்மினி பூச்சியின் ஒளிக்கும் ஒளிக்கும் உள்ள
மைக்ரோ நொடிகளில் தான் உன்னை பிடிக்க
ஆரம்பித்தது
அதேபோல்
பிரிவிற்கும், நினைவுக்குமான போராட்டத்தில்
இக்காலமே
கனத்தும் போகிறது.

**ம.சூர்யா திருமால்**

சுவடற்ற காற்று
இசைக்கும் ஹார்மோனியம்
கிழிந்த வாழையிலை

**கோ.லீலா**



திரைப்படம் போல்
ஓடிக் கொண்டிருக்கும் கனவினில்
முக்கிய கதாபாத்திரத்தில்
நடித்துக் கொண்டிருக்கிறேன்
பிணமாக...
காட்சி முடிந்தபின்
என்னை எழுப்பிவிட்டு விடுங்கள்
சிரித்தபடியே நான் எழுந்து
நிஜப்பாத்திரத்தை
இட்டு நிரப்பவேண்டும்...
உங்களிடம்
கேட்டுக் கொள்வதெல்லாம்
ஒன்று தான்,
ஞாபகமாக நான் நடித்த
திரைப்படத்தின் கதையை மட்டும்
சொல்லிவிடுங்கள்...

**சகா**

ஒரு வாழ்வு
எவ்வளவு எளிமையானதாக
இருக்க வேண்டும்

நினைத்தால் சாக
நினைத்தால் உயிர்த்தெழ.

**மழைக்குருவி**

# கரப்பான் பூச்சியின் சவால்



குளியலறையில் ஒருத்தி விளக்கமாற்றால் அடித்துத்
தன்னைக் கொல்ல முனைகையில்
கரப்பான் பூச்சி கேட்டது:

ஏன் வெறுக்கிறாய் என்னை?

பதில் சொல்லாமல்
மீண்டும் மீண்டும் அவள் அடிக்கவே பறந்து அவளை
பயமுறுத்தி
உயரத்தில் போய் உட்கார்ந்து பொறுமையாய் கேட்டது
இன்னும் ஒரு முறை.

ஏன் வெறுக்கிறாய் என்னை?

அடிப்பதை நிறுத்திவிட்டு
அவள் சொன்னாள்:

எதிர்பாரா தருணத்தில் பறந்து
திகில் படத்தைப் போல்
என் இதயத்துடிப்பை எகிறவைக்கிறாய்.

குளிக்கும் போது
ரகசியமாகக் கால் வழியே
உடல் மீது ஏறி
உயிரைப் பதறவைக்கிறாய்.

பூச்சிக் கொல்லி மருந்து அடித்து ஒழித்த பிறகும்
விளக்குமாற்றினால் நசுக்கி
அழித்த பிறகும் தப்பி வாழ்கிறாய்
கழிவறை மூடிகளுக்குக்
கீழே சென்று .

முடிக்கவே முடியாது உன் கதையை எனச் சவால்
விட்டு
என் அகங்காரத்தை அதிகாரத்தைக் கேலி செயகிறாய்
.

எல்லாவற்றுக்கும் மேல்
பார்க்க அருவருப்பாய் இருக்கிறது
உன் தோற்றம்.

என அடுக்கத் தொடங்கினாள் அவள்...

கரப்பான் பூச்சி சொன்னது:

குளியலறையில்
எதிர்பாரா தருணத்தில் நுழைந்தது நானல்ல நீதான்...

காலால் மிதிபடும் நிலை வந்தால்தான் உனக்குத்
தெரியும்
எதைப் பற்றியாவது
தப்பிக்கும் படபடப்பும் பரபரப்பும்.

அன்றாடம் எங்களைப் போல்
கொலை முயற்சிகளைச் சந்திப்போர்
எவருமுண்டோ?

அப்படி ஒரு நாள் வாழ முடியுமா
உங்களால்...

தப்பிப் போய்
சாக்கடைகளில் ஒளிந்து வாழ்ந்தாலும் விடுகிறீர்களா?

ஏதோ அருவருப்பாய் இருப்பதால் எங்களை
வெறுப்பது போல் கூறுகிறாய்...

யாரை வாழ விட்டீர்கள் நீங்கள்?

அழகாய் இருக்கும் கிளிகளை
அடைக்கிறீர்கள் கூண்டுகளில்

மயில்களின் இறக்கையைப் பிடுங்கி
விசிறி செய்கிறீர்கள்

யானைத் தந்தம்
வீட்டுச் சுவருக்கு அலங்காரம்

புலிப் பல் ஆபரணம்

பாம்பின் தோல் ஆடை

காண்டாமிருகத்தின் கொம்பு...
சொல்லவே வாய் கூசுகிறது

ஆடு மாடு கோழி எல்லாம் போதாதென்று
மான்களை வேறு ரகசியமாய் வேட்டையாடுவீர்கள்

வன விலங்கு முதல் சிட்டுக் குருவி வரை
எல்லாவற்றையும்
அழிக்கும் உங்களைத்தான்
வெறுக்க வேண்டும் நாங்கள்.

ஆனால் நீங்கள் வெறுக்கிறீர்கள் எங்களை
அதுதான் கொடுமை.

அழகாய் இருப்பதாய் நினைக்கும்
உன்னை ஒன்று கேட்கிறேன்:

அழிப்பதுதான் அழகா?

நாங்கள் உயிர் வாழ்வது
உன் அகங்காரத்தையும் அதிகாரத்தையும்
கேலி செயகிறதா...

அப்படி எனில்
அந்தக் கேலி முடியவே முடியாது ...

சவால் விடுகிறேன் உனக்கு:

முடிந்தால் எங்களை அழித்துப் பார்

முடிவு வரை இருந்தால்
முடிவு யாருக்கு என்பதையும் பார்.

நீண்ட மீசையை அசைத்து
உறுதியாக உற்றுப் பார்த்தது
அவளை ஒரு முறை.

மயங்கி விழுந்தாள் அவள்
கரப்பான் பூச்சியின்
சவாலையும்
நீண்ட மீசை அசைவையும்
சந்திக்க முடியாமல்.

**பிருந்தா சாரதி**



கிராமத்துக் கொண்டாட்டங்களின்
பந்தல்களில் சொருகி
வைத்திருக்கும் புங்கமரத்தின்
இலைக்கொத்துகளென
என் மனமெங்கும்
உன் நினைவுச் சிறுகிளைகள்...!!

மேய்ப்பவன் இல்லாவிடினும்
தொழுவம்தேடி வரும்
ஆநிரையாய்
உன் நினைவுகளுக்குள்
ஓடி நிலைகொள்கிறது மனது!!

நினைவுகள் மட்டுமே
வாழ்வென மாறிய எனக்கு ...
காற்றின் கைகளில் கொஞ்சம்
உன் வாசத்தை அனுப்பிவை
சுவாசித்து மரணிக்கிறேன்!!!

**லாஸ்யா**

சூடாக நான் குளிப்பதற்கு
சூடாகிக் கொண்டிருக்கிறது
விறகு அடுப்பில்
ஒரு பழைய பானை

**ஜேபி நீக்கிழார்**



மதமற்றதொரு இடத்திற்குச் சென்றேன் கடவுளை
தரிசிக்க
பஜனைகள் பாங்கொலிகள் பிரசங்கங்கள் எதுவும்
கேட்காத இடமது

சாமியானாக்கள் ஊது பத்திகள் பிளாஸ்டிக் சேர்கள்
எதுவும் தென்படாத இடமது

நான் நினைத்தது போல் அவர்
அத்தனை முதியவராக இல்லை
என்னை விடவும் இளமையான தோற்றத்தில்
பளீர் புன்னகையில்
மாசற்ற  சிறுவனைப் போல் இருந்தார்

கயிற்றில் தொங்கும்
ஈரத் துணிபோல் ஆடும் மனதை
கவ்விப் பிடித்தது அவர் புன்னகை

ஏதும் செய்ய இயலாதென
கைகளைப் பிடித்தவரின் விரல்கள்
வெம்மையில் தகித்தன

கடவுளாய் இருப்பதின் துக்கம்
அதிர்வுகளில் தெரிந்தது

விடைபெறும் நேரம்
ஒரு பறவை போல இந்தப் பூமியை
சிறகுகளில் ஏந்திச் செல்ல தோன்றுகிறது ஆனால்
சிறகுகளைத் தான் அசைக்க முடியவில்லை என்றார்
பிம்பங்கள் நொறுங்கியது

மனிதனாக இருப்பதை விடவும்
கடவுளாக இருப்பதின் துக்கம்
கடல் மடங்கு பெரிது என்று
நான் துக்கித்து நின்றேன்

**தங்கேஸ்**



முழுப் பக்க அளவிற்கு
எல்லா பத்திரிக்கைகளிலும்
படத்தோடு விளம்பரம்..

சாலையின் எல்லா சுவர்களிலும்
நினைவஞ்சலி சுவரொட்டிகள்

ஆசிரமங்களுக்கு
இலவச மதிய உணவு..

அலுவலகம் முழுக்க ஒரு நிமிடம்
மௌன அஞ்சலி..

ஊரிலிருக்கிற முதியோர் இல்லங்களுக்கு
இலவச சேலை..

எல்லாமும் சரியாகத்தான்
செய்கிறாய்..

ஒரே ஒரு குறைதான்

சிறிதுநேரம் அவளுடனும் செலவிட்டிருக்கலாம்..
உயிரோடு இருந்தபோது..

**ச.ஆனந்தகுமார்**

இரவெல்லாம் பெய்த மழை
நிரம்பி வழிகிறது
கொட்டாங்கச்சியில் வானம் ......!!

**ச. இராஜ்குமார்**

# நழுவாத நம்பிக்கை



தன் இறப்புக்குப் பின்
வீட்டில் ஒருவர் விடாது
அத்தனை பேரின் கனவிலும்
வந்து சென்று விட்டார் தாத்தா.

தாத்தாவுக்கு
முதல் டிக்காக்சன் காப்பி தான் பிடிக்கும்...
தாத்தாவுக்கு
சூடாகச் சாப்பிடத்தான் பிடிக்கும்...
தாத்தாவுக்கு
எண்ணெய்ப் பண்டம் ஆகாது...
தாத்தாவுக்கு
கருக்கலிலேயே விழிப்புத் தட்டிவிடும்...
தாத்தாவுக்குக் கோபம் வராது
வந்தால் போகாது...
தாத்தாவுக்கு
தானாய் எடுத்துப் போட்டு
சாப்பிடத் தெரியாது
வீட்டுக்குள் நுழைந்தவுடன்
என்னைத் தான் தேடுவாரென்று
முப்பொழுதும்
தாத்தனையே மூச்சாக்கிக் கொண்டிருக்கும்
பாட்டியின் கனவில் மட்டும்
ஏனிந்த தாத்தா வரவேயில்லையென்று கேட்கிறாள்
பேத்தி..

தாத்தா இறந்ததாக
நானின்னும் நம்பவேயில்லையே
என்கிறாள் பாட்டி.

அன்பு மணிவேல்



திருவிழாவுக்கு வந்துசெல்லும் சிறுவர்கள் கைகளில்
நேற்று நீங்கள்
ஆசையாய் வாங்கிய
அதே புல்லாங்குழல் இருக்கிறது

உங்களைப்போலவே
ஒரு இசைக்கலைஞனின்
பெருமிதத்துடன்
வாங்கிய மாத்திரத்தில்
வாசிக்கத் தொடங்குகிறார்கள்


எப்படி ஊதினாலும்
சுருட்டிய பூவரசு இலை தரும்
ஒரே மாதிரி இசையைத் தந்தே
ஏமாற்றுகிறது

விற்பவன் எளிதாய் வாசித்துக்காட்டும்
தோற்றப்பிழைக்கு மயங்கி
அதைப்போலவே
இசைக்கும் ஆசையில் வாங்கியவர்களிடம்
இறுதிவரை அது
மூங்கிலாகவே தங்கிவிடுகிறது

வாசித்தவனைத் தாண்டி
துளைகளில் வெளிவரும்
காற்றை கட்டுப்படுத்தி
வேறொரு இசையாய்
பிரித்தெடுக்க முயல்பவன்
கையில் மட்டுமே
புல்லாங்குழலாய் மாறுகிறது

நீங்கள் எப்படியோ தெரியாது
என்னிடம்
நிறைய மூங்கில்கள் இருந்தது...!

**சந்துரு_ஆர்சி**



ஒருபோதும் தேடாதீர்கள்
தொலைத்தவற்றை
தொலைவாய் போனவர்களை...
ஒரு காதல்
சவமாக்கியது
ஒரு நட்பு
முடமாக்கியது
உறவுகள் துரத்த
நாடோடி ஆனேன்
கனவுகளில் எரிந்தேன்
கற்களானேன்
நீரானேன்
பானையும் நானே ஆகினேன்
காகமாய் நானே ஆகி
என்னையேக் கண்டடைந்தேன்
என் வீட்டுக் கண்ணாடி
முன் நின்று அழுகிறேன்
கண்ணாடியை உடைத்தேன்
சில்லுசில்லாய்
கோடி நான்கள்
என்னை எப்படியாவது
எனக்குள் தொலைத்து விடுங்கள்

**எஸ்தர் ராணி**

மழை நாளில் நனைந்த
ஈர ஆடையை
மாற்ற சொல்லி
கடிந்திடும்
அக்காவிற்கு நான்
அவளின்
குழந்தையின் சாயல்......

**மெஹராஜ்பேகம்**



முதல் முத்தத்தின்
ஈரம் இன்னும் காயவில்லை

எத்தனையோ முத்தத்தின்
துடைத்தலுக்கு
பிறகும் !


**தமீம்.அசாருதீன்**

சொற்களெல்லாம் உதிர்த்துவிட்டு
முழு நிர்வாணமாக நிற்கிறேன்
இன்னும் ஆடையைக்
களைய வேண்டும் என்கிறாய்
அந்தமாய்
நினைவின் கோடியையும்
அவிழ்த்து
கடுந்தீயில் எறிவதாய்
உத்தேசித்து இருக்கிறேன்
எச்சத்தில் மிஞ்சும்
சாம்பலையாவது மிச்சம் வை....

**கருவை ந.ஸ்டாலின்**

கைப்பிடித்த குழந்தை
விழாமல் பார்க்கிறார்
கைப்பேசி!

**பிரபு பாரதி**



கவிதையை
வாசிக்கும் மனம்
எப்படி இருக்கும்.

காற்றில்லாத பொழுதில்
உதிரும் பெருமரத்து பூவாய்.
தெளிந்த நீரில்
விழுந்த கூழாங்கல்லாய்.
அழுது அடம்பிடித்து
ஆ காட்டி சோறுண்டு
அயர்ந்துறங்கும் மழலையாய்.
காத்திருந்தவனின் காதில்
காதலொலித்த யுவதியாய்.
சாமத்திற்கு........
வெள்ளையடித்து விளையாடி
அதற்கு போர்வையுமிட்டு
உறங்கிப்போகும் காமமாய்.

இப்படி மட்டுமல்ல...........

இப்படியுமாகும்
சில கவிதைகளை
வாசிக்கும் மனம்

நேரெதிர் வந்து கிறீச்சிட்டு
நிற்கும் டிப்பர் லாரியின்
சக்கரத்தில் மயிரிழையில் உயிர்தப்பியவன்
விடும் பெருமூச்சின்
சாயலாகக்கூட.........

**கா வெங்கடேஸ்வரன்**



பித்தன் தெருவில் இறங்கி நடந்து கொண்டிருந்தான்

கற்களை எடுத்து அவனை நோக்கி வீசினார்கள்

பித்தன் நின்று பதிலுரைத்தான்
உங்கள் கற்களால் எனக்கு எந்த காயமும் உண்டாகாது

நான் உங்கள் கற்களுக்கானவன் அல்ல
உங்களின் சொற்களுக்கானவன்

சேகரிக்க முடிந்த உங்கள் கற்களை விடுத்து
சேகரிக்க விரும்பாத சொற்களுக்காக வந்தவன்
உங்கள் சொற்களும் என்னை காயபடுத்த முடியாது

பித்தன் படியில் உறங்கி கொண்டிருந்தான்
பக்கத்தில் நாய் குரைத்துக்கொண்டிருந்தது

அருகில் உறங்கியவர்கள் விழித்தார்கள்

பித்து பிடித்துவிட்டது பித்தனுக்கு
இவ்வளவு நாயின் சத்தத்திலும்
எப்படி உறங்குகிறான் பார் என்றார்கள்

பித்தன் பதிலுரைத்தான்
குரைக்கும் நாயின் சத்தத்தோடு
நீங்கள் யுத்தம் செய்கிறீர்கள்
நானோ அதனுடன் புத்தம் செய்கிறேன்
அதனால் உறங்குகிறேன்

பித்தன் சென்று கொண்டிருந்த வழியில்
திடீரென நின்றான்
விளையாடிக்கொண்டிருந்தவர்கள்
விலகிப்போ நாங்கள் விளையாடுகிறோம் இடையில்
நிற்காதே என்றார்கள்

பித்தனோ
விளையாடுவது உங்கள் இயல்பு
ஆனால் வழியில்தானே நீங்களே விளையாடுகிறீர்கள்
என்னை இடையில் நிற்கிறேன் என்பது
எப்படி சரியாகும் என்றான்

பித்தன் சாலையில் ஒலித்த பாடலுக்கு
ஆடிக்கொண்டிருந்தான்
எல்லோரும் கைதட்டிச்சிரித்தார்கள்
பித்தனும் சிரித்தான் ஆடுவதை நிறுத்தாமலே
மேலும் உரைத்தான்
உங்களால் முடிந்தும் முடியாததை
நான் செய்கிறேன்

உங்கள் கால்களில் இருக்கும் சமூக விலங்கில் இந்த
பாடல் பூட்டப்பட்டிருப்பதை நான் பார்க்கிறேன்

என் கால்களோ இப்போதைக்கு என்னுடையதல்ல
அது
இப்போது ஒலித்துகொண்டிருக்கும் இந்த
இசையினுடையது என்றான்

பித்தனை கடந்து சென்றான் ஒரு பைத்தியக்காரன்

அவன் வாய் இவ்வாறாக முணுமுனுத்தது

இவனும் பைத்தியம்தான் ஆனால்
வைத்தியம் தேவைப்படாத பைத்தியம்

**மணவை லைவின்**



அடுத்தோர் சுயத்தில் உள்
நுழையாதீர்கள்

அடுத்தோர் இரகசியங்களை
சொல்லுமாறு வேண்டியும்
நிற்காதீர்கள்

அடுத்தோர் நாற்குறிப்பைப்
படிக்க முற்படாதீர்கள்

அடுத்தோர் புன்னகைக்கு
விளக்கம் தேடாதீர்கள்

அடுத்தோர் பிரார்த்தனை பற்றியும்
வினவிக் கொண்டிருக்காதீர்கள்

அடுத்தோர் கனவுகளை
தெரிந்திட ஆர்வம் காட்டாதீர்கள்

அவை அவர்களுக்கானது
அவை அவைகளாகவே
அவர்களோடு இருக்கும் வரையில்

இன்னும்
அடுத்தோரின் ஆதிக்க நுழைவு
இல்லா வரையில்

மேலும்
அடுத்தோர் நீங்களானால்
அடுத்தோர் உம் சுயத்தில்
நுழைவது
எவ்வளவு சலிப்பை கொடுக்குமோ அவ்வாறே
உம் நுழைவும் அடுதோருக்கு...

**ஷபானா ஆதம்லெப்பை**



என் கடந்த காலத்தைக் கசக்கிப் பிழிந்து களைத்துப்
போகிறவர்கள்..

என் கடந்த காலத்தின் கடைசிப்பக்கம் வரை படித்துத்
தீர்ப்பவர்கள்..

என் கடந்த காலத்தின் கரைதனில் அமர்ந்து
கற்பனைக் கதைகளைக்
கட்டுபவர்கள்..

என் கடந்த காலத்தைக் கைவிடாது
பற்றிக்கொள்பவர்கள்..

இவர்களன்றி
என்னைக் கருணைக்கொலை செய்திட வேறு யாரால்
தான்
இயலும்?!

இப்போதெல்லாம்
என் கடந்த காலத்தின் கதாநாயகர்கள் கூட
இவர்கள்தான்!!!!

**சஸ்னா லாபிர்**

நான் தூக்கி வீசியது
நீ சிறகை விரிக்கத்தான்
பறத்தல் அழகு,
அகண்ட வானில்...

**கதிரவன் மதி**



உம்மணா மூஞ்சி
ஜானகிக்கு அடையாளம்
தெரிந்திருந்தது என்னை
அவளுக்குஅங்கொன்றும் இங்கொன்றும்
நரைத்திருந்தது...

சினைத் தவளைக்கு
சீக்கு பார்த்த
சின்னக்குழந்தைக்கு
யாரென்று தெரியவில்லை
சொல்லிய பின்
சொரிந்து கொண்டான் தலையை....

கோவில் பூசாரிக்கும்
கொழந்தண்ணனுக்கும்
வயசாகிப் போயிருந்தது
போனவருடம் பார்த்ததைவிட.

சில முகங்கள்
நியாபகத்திலிருந்தது
சில முகங்கள்
மறதியிலிருந்தது..

ஓட்டுவீடுகள் பல
மாடிவீடாயிருந்தது...
மண்ரோடு தார் ரோடாயிருந்தது.
ஆனாலும் அந்தத்
தெருக்களில் நிழலாடிய
என்சிறு வயது பொழுதுகள்
நிறை மகிழ்வே...

அம்மாவீடுகள்
அடிக்கடி போகாதவரை
எப்போதும் அழகுதான்..

**கலைச்செல்வி**



அறியாமல் நிகழும் மாற்றமென
சிலதை விரும்பிக் கடக்க முடிவதில்லை
இப்போதெல்லாம்

பழக்கங்கள் புதியதென்பதால்
கேட்கப்படும் கேள்விகளும்
ஏன் எழுப்பப்படும் குரல் கூடப் புதுமையாகவே
காட்டப்படுகின்றன


பழகியவர்களும் சிலவேளை
கண்டு வந்த வினோதங்கள் போலவே
மாற்றங்கள் பெற்றிருக்க

எப்போதும் சீர்பிடிக்க
முந்திக் கொள்ளும் ஓசைகள்
அகம் பிரண்டதென்றும்
அழிவின் தீக்குரலென்றும்
அவ்வப்போது இணைக்கப்படும்
நிஜங்களாக

குருட்டு மனிதனின்
இருட்டு அறையில் பெசுங்கிய
எலும்பின் மச்சையாய்
இப்போது,
சயனத்திடலில் உதறப்பட்டுக் கிடக்கிறேன்

அதுபோதுமே
இனி உருவங்கள் நெடிதாக
அவர்கள்
இயல்பாய்த் தனக்கான நிறங்களை வரைந்து
கொள்வார்கள்!

**வானம்பாடி**



இருள்
ஒரு நீர்மத்தைப் போல்
ஒழுகிக் கொண்டிருக்கிறது
சின்ன மைக்கட்டியாய்
உருட்டி விளையாடுகிறது
நாயொன்று

புதியதாக
ஒரு நட்சத்திரம்
முளைக்கிறது

கசிகிறது
உண்மையின்
ஒளி

குரைத்துக்
கொண்டிருக்கிறது
நாய் இப்போது
கண்கூசும்
ஒளிப்பாதையில்
நின்றவாறு

கெக்கலிக்கிறது
இருளின்
மைக்கட்டி

**மகிழினி காயத்ரி**

# மழைச்சிறுமி



–
சிறுமியின் விரல்களை
தஞ்சமடைந்ததும்
மழையாகிறது வானம்...

–
கத்தியாய் மழைத்துளி
பூமியைக் காக்கிறது
சிறுமியின் உள்ளங்கை.

–
சிறுமியின் விரலை
தப்பவிட்டது மழைத்துளி
கிடைத்தது நரகம்.

–
சாளரத்திற்கு வெளியே
நீள்கின்றன
சிறுமியின் விரல்கள்
பூமிக்கொரு வானவில்.

–
முத்துகள் மட்டும்
கடலை அடைகின்றன
சிறுமியின் விரலில்
மழைத்துளிகள்...

ரகுநாத் வ



என் மிக மோசமான காயங்களுக்கு
பிறகு வந்த அருமருந்து நீ
அப்படித்தான் நம்பிக்கொண்டிருந்தேன்
நீயும் எனக்கு பெருங்காயம் தந்து போன ஒருநாளில்
இந்த நம்பிக்கைகள் எல்லாம் உடைந்தே போனது
மறுபடி ஒரு வரவை நான் இன்னமும்
ஏன் எதிர்பார்க்கிறேன்.?
இந்த கண்கள் நம்ப மறுக்கிறது
நீ வரப்போவதில்லை என்பதை
ஆனாலும்
நீ தந்துவிட்டுப்போன
நம்பிக்கைகள் அப்படி
அவை மெல்ல
உயிரைக்குடித்துக்கொண்டிருக்கிறது.,
எப்போதாவது ஒரு வரவு
நிகழ்ந்து விடுமென்ற
இந்த குருட்டு நம்பிக்கைகள்
மட்டும் தான்
என்னை சிரிக்கவும்
நடமாடவும் வைக்கிறது
நீ வந்து விடப்போவதில்லை என்ற
ஆகப்பெரும் உண்மைகளுக்கு அப்பால்
நான் வாழ்ந்து கொண்டிருக்கும்
உலகில்
கொடுந்தனிமைகள் நீக்கி
தலைகோதி அணைத்து
மார்பில் உறங்கவைக்க
நீ தினம் தினம்
வந்துகொண்டுதானே இருக்கிறாய்..
நான் உயிர்த்திருக்க இப்போது
இது போதுமானது தான் அம்மு.

**குபோதினி**



பழம் தின்று களைத்து போன
நாட்களை அருந்தி பார்க்கிறது
என் இன்றையப் பொழுது.

காசாகிய
பூக்களும் காய்களும் பழங்களும்
என்னை
தூரத் தள்ளி விட்டு சிரித்தன

பீக்காடுகளில் முகம் புதைத்து
அழுது புரண்ட உடலை
அரவணைத்த வாசங்களில்
என் நாயுண்ணி
நரம்பு மண்டலம் எல்லாம்
ஊறிக் கிடக்கிறது.

கறுப்பு நிற பழங்களை
உள் நாக்கு முட்ட முட்ட
பொதுக்கிச் சுவைத்து
வாயால் வழிந்தோடிய
எச்சிலை
துடைக்கும் போது
மீசை முறுக்கும் கனவுகள்.

வண்ணப்பூ
வாழ்ந்த இடம் எல்லாம்
வண்ணத்துப் பூச்சிகளை
வாழத்தானே வைத்தது
சுதந்திரம் கொடுத்து.

தின்று கழித்து கிடந்த
உயிர்
காட்டையும் கனவையும்
எப்படி மறக்கும்.

மீசையை நிஜமாகவே
முறுக்கி கொள்கிறேன்
என் பீக்காடுகளுக்கு
நான் காவல்காரன்.

காரையன் கதன்



கணக்கெழுதி குடும்பம் நடத்தினாலும்...
உறவுசனம் வந்து போனா
வாசத்தில்....
மாச சாமான் முன்னாடியே
பொக்கைவாய் காட்டிடும்...

சாம்பார் சாயலில்
சிறு பருப்பு சாம்பாராகும்...
வெறுத்து நிற்கும் உப்புமா
ஆஹாவென ருசிபடும்...

ஓரம்கட்டிப் போட்ட
தட்டையும்...மொச்சையும் மணந்து கிடக்கும்...
உச்சாணிக் கொம்பில் பழுத்த தக்காளியைவிட
கருத்த புளியில் ருசி கூடிப்போகும்...

சிறப்பு ருசி
சின்ன வெங்காயமென்ற
பட்டிமன்றம் போட்ட நாவு
பெல்லாரியின்
நீர்த்த சுவைக்கு தீர்ப்புச் சொல்லும்...

குழிக் கரண்டி எண்ணையில் மிதந்த
மொருவல் தோசையை விட.. தொட்டு தடவி ஊற்றிய
தோசை
அருமையென நல்ல பெயர் சூட்டி நிற்கும்..

ரொட்டிகேட்ட பிள்ளைக்கு
வயிறு கட்டும்மென
புது புத்தி முளைக்க
பொரிவிளங்கா உரண்டை
சத்தாக்கப்படும்....

காலியான நாப்கின் பாக்கெட்டில்
வீசியெறிந்த காட்டன் துணிகள்
பக்குவமாக்கப்படும்..

இறுதி நாட்களில்
இறுக்கி கொள்ளும் கயிற்றை
சாமார்த்தியமாய் கழட்டி கொள்வதில்
நாங்கள்
நடுத்தரவர்க்கத்தின் சாமானியர்கள்..

**ஸ்ரீவாரிமஞ்சு**

# படைப்பு சங்கமம் - 2023

**30**
சனிக்கிழமை
**SEP**
**2023**




படைப்பு
சமூகத்தின் இணைப்பு

சர்.பிட்டி.தியாகராயர் கலையரங்கம்,
ஜி.என்.செட்டி சாலை, தி.நகர்,
சென்னை - 600017

நேரம் : காலை 9மணி முதல் இரவு 7மணி வரை

www.padaippu.com